1225

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

Vol. 1. December 1938. No. 1.

## விஷய சூசிகை.


| | | பக்கம் |
|---|---|---|
| நமது பத்திரிகை:— | பத்திராதிபர் | |
| சுதேச வைத்தியத்தின் பெருமை:— | | |
| ஔஷத சாரம் | பண்டிட் நாராயணய்யங்கார் | ... 1 |
| ஸஹஸ்ரா யோகம் | டாக்டர் T. S. சுப்ரமண்யம் | ... 1 |
| வைத்தியச் செய்திகள் | காரியதரிசி சுதேச வைத்தியசபை. | ... 15 |



| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, $\frac{1}{2}$-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, $\frac{1}{4}$-ச்கு ரூ 2 |


Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher.

[விலை 0—3—0

...ஸ், காக்காத்தோப்புத் தெரு, மதுரை:—38.

OFFICE OF THE ... BOOKS
16 DEC 1938
MADRAS
JL
:5n211, N25VC
N38.1.1.
226167

## T. S. N. ரண நிவாரிணி என்னும் களிம்பு

மேற்படி களிம்பு எல்லாவித வெட்டுக்காயங்கள், அடிபட்ட காயங்கள், வேனற்கட்டி, ரத்தக்கட்டி, முகப்பரு, சொறி, சிரங்கு கரப்பான், மேகவிரணம், அக்கி, மேகப்படை, எச்சித்தழும்பு மூலமுளைகள், நெருப்புக் காயங்கள் முதலிய தோலில் வரும் சகல வியாதிகளுக்கும் மேலுக்கு உபயோகிக்கப்படும் ஓர் அத்யற்புத மான களிம்பு. இதை க்ஷய வியாதிகளில் மேலுக்குத் தடவினால் எரிச்சல் முதலிய ஒருவித தொந்திரவுமின்றி மிகவிரைவில் குணப் படுத்துமென்பது திண்ணம். பலர் இதை உபயோகித்து நல்ல பலன் அடைந்திருக்கின்றனர்.

சிறிய பாட்டில் விலை அணா **5.** பெரிய பாட்டில் விலை அணா **9.**

தபாற் செலவு வகையறா பிரத்யேகம்.

---

## T. S. N. கர்ணபிந்து அல்லது காதுதைலம்.

இந்தத்தைலம் காதுகளில் உண்டாகும் குத்துவலி, சீழ் வடிதல், புண்கள், காதிரைச்சல், காதடைப்பு, சிலவகை செவிடு முதலிய காதுகள் சம்மந்தமான எல்லா வியாதிகளையும் குணப் படுத்தும். குழந்தைகள் முதல் சகலரும் உபயோகிக்கலாம். பலர் உபயோகித்து பூர்ண குணம் பெற்றிருக்கின்றனர்.

சிறியபாட்டில் $\frac{1}{8}$ அவுன்ஸ் அணா **2** பெரியபாட்டில் $\frac{1}{2}$ அவுன்ஸ் அணா **7**

இன்னும் எல்லாவித சாஸ்திரீயமான மருந்துகளும் இவ் விடம் கிடைக்கும்.

தாபாற் செலவு வகையறா பிரத்யேகம்.

விலாசம்:— T. S. நாராயணசாமி அய்யர்.
ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத்தோப்புத் தெரு, மதுரை.

---

## க்ஷயாந்தகம்.

க்ஷய பஸ்மமும் லேகியமும் உபயோகித்தால் நுரை யீரல் சம்மந்தமான க்ஷயம் (Pulmanory Tuberculosis) குணமாகும் க்ஷய வியாதியில் இம்மருந்து ஓர் Specific என்றே கூறவேண்டும். ஒரு மாதம் உபயோகிக்கக்கூடிய மருந்து விலை ரூபா **25.**

தபாற் செலவு தனி விலாசம்:—

பண்டிட் S. நாராயண அய்யங்கார்.
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

உ

OFFICE OF … BOOKS
16 DEC 1938
MADRAS

# நமது பத்திரிகை

---

சுகவாழ்க்கையை விரும்பும் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய விஷயங்களில் மிகப் பிரதானமானது சுதேச வைத்திய முறையே. மேல் நாடுகளில் சிறுபான்மையோரால் தொழில் முறையில் வைத்தியம் ஆதரிக்கப்படினும் நமது நாட்டில் ஹிந்து மதத்தில் ஓர் பாகமாகவே அனாதி காலமாகக் கருதப்பட்டு வருகின்றது. இவ்வுலக வாழ்க்கையையே பெரிதென மதிக்கும் நாஸ்திகர்களும், பரலோகமே பெரிதெனக் கொண்டாடும் பெரியோர்களும், தங்கள் கொள்கைகளுக்கு இன்றியமையாத சாதனங்களில் மிகச்சிறந்ததென வைத்தியத்தையே நினைத்தனர். வைதிகர்களில் மிக்காரில்லையெனப் பெருமை பெற்ற பல சித்தர்களும். முனிவர்களும், நூல்களை லோகோபகாரமாக வெளியிட அவற்றையனுசரித்துப் பல பௌத்தர்களும் தங்கள் அனுபவத்தில் கிடைத்துள்ள ரகசியங்களையும் சேர்த்து கிரந்த ரூபமாகத் திரட்டினர். உலகினில் மற்ற பாகங்களுக்கு இவைகளே மூலகிரந்தமாக விளங்கிற்றென்பதும், இவைகளையே ஆதாரமாகக்கொண்டு மற்ற தேசத்தினரும் தங்கள் தங்கள் பாஷையில் கிரந்தங்களை இயற்றினரென்பதும் பலர் அறிந்த விஷயமே. ஆரம்பத்தில் அயல் நாட்டினருக்கு மூலகிரந்த பரிசயம் நன்றாகவிருந்தது பிறகு பிந்தியவர்களுக்கு அது போதாமல் தங்கள் தாய்பாஷையிலுள்ளவற்றையே கற்றும், அதில் சொல்லப்படாத விஷயங்களைத் தங்கள் சொந்த அனுபவமுறையைக்கொண்டு கண்டுபிடித்தும் வருவது நாளைக்கும் பிரசித்தமே. நமது நாட்டினில் பலர் நமது தாய்பாஷையில் பெரியோர்கள் வெளியிட்ட பல ரகசியங்களையுணராது அவைகளைப் புறக்கணித்துப் பெரு மாய்கையில் மூழ்கி தூஷித்தும் வருகின்றனர். அவைகளைக் கற்றுணர்ந்த பலர் பலனற்ற மாத்சரியத்தால் சகோதர பாஷைகளிலுள்ளவற்றை வேறுபடுத்தி அவைகளில் ஏற்றத்தாழ்வுகளையும் தங்கள் மனம்போல் ஆரோபித்து குற்றம் கூறுகின்றனர். உண்மையில், தமிழ் முறையும், வடமொழி முறையும் யூனானிமுறையும், கொள்கைகளில் வேறின்றி ஒன்றாய்க் கலந்திருப்பது மூன்று முணர்ந்த புலவர்களுக்குப் புலப்படும். தங்கள் தங்கள் தாய் பாஷையில் ஈடுபட்ட அவரவர்கள் தங்கள் தங்கள் பாஷையிலுள்ளவற்றைப் போற்றி ஆதரிப்பினும் இம் மூவகை முறையில் சகோதர உணர்ச்சி சற்றும் மாறுபட நியாயமில்லை. வடமொழியில் 'ப்ராஹ்மீ' என்றும் 'பிரம்மீ' என்று ஹிந்துஸ்தானியிலும், 'பிரமி' என்று தென்மொழியிலும் ஒரேபொருளைக் கூறு

வதே இதற்கு அத்தாக்ஷியாகும். அல்பகாரணங்களால் ஒருவயிற்றிற் பிறந்த சகோதரர்களும் கலகம் போடுவதுபோல ஒருவருக்கொருவர் சண்டையிடும் நமது வைத்திய சகோதரர்களை ஒன்றுபடுத்துவது நமது பத்திரிகையின் முக்கிய நோக்கமாகும்.

நமது சுதேச வைத்திய முறைகளின் உண்மையறியாது பிதற்றும் சிலருக்கு அவைகளின் தத்துவத்தை யுணர்த்தி சமாதானமளிப்பதும் நமது பத்திரிகையின் செயலாகும். சரீரத்தின் உள் உறுப்புகளாகிய சுவாசப்பை, ஹிருதயம், கல்லீரல், மண்ணீரல் முதலியவற்றின் இலக்ஷணங்களும் செயல்களும் சுதேச வைத்திய கிரந்தங்களில் சொல்லப்படவில்லை யெனப் பலர் கருதுகின்றனர். வியாதிகளின் லக்ஷணங்களையறிய நிதானபாகம் போதாதெனச் சிலர் சொல்லுகின்றனர். சுதேச வைத்திய கிரந்தங்களே சாஸ்திரீய முறையில் எழுதப்படவில்லையெனப் பலர் நினைக்கின்றனர். பதார்த்தகுணம் நன்ருகக் கூறப்படவில்லையெனச் சிலர் கூறுகின்றனர். ரசாயன ஆராய்ச்சி சரிவரச் செய்யப்படவில்லையெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். கற்பஜசக்தியுள்ள ஹிந்துக்களால் முத்தோஷம் போன்ற சிற்சில விஷயங்கள் யூகத்தால் சொல்லப்பட்டவைகளெனவும், அவைகள் சாஸ்திரீய ஆராய்ச்சியில் கொஞ்சமும் நிலை நிற்கக் கூடாதவைகளெனவும் பலர் வாதிக்கின்றனர். இதுபோன்ற பல குறைகள் நமது வைத்தியத்தில் சொல்லப்படுகின்றன. இவைகளுக்குத்தக்க உத்தரமளிப்பதும் நமது பத்திரிகையின் நோக்கம். பலவைத்திய பத்திரிகைகள் பலபாஷைகளில் வெளிவந்துகொண்டிருப்பினும் அவை தேவைக்குப் போதாதெனப் பல நண்பர்கள் வற்புறுத்தியதின்பேரில் நாம் இப்பத்திரிகையை ஆரப்பிக்கலாயினேம். அதிலும், நமது தென்நாட்டில் இதுபோன்ற ஒரு பத்திரிகை நடைபெறுவது அவசியமென நினைத்தே இக்காரியத்தில் துணிந்தனம். இப்பத்திரிகையில் வைத்திய சாரம், ஔஷத சாரம், ஸஹஸ்ரயோகம், என மூன்று புஸ்தகங்கள் வெளிவரும். வைத்திய சாரம் முதல் பாகம் ஏற்கனவே நாம் வெளியிட்டிருப்பதால் அதன் இரண்டாவது பாகம் தொடர்ச்சியாக வெளிவரும். இம்மூன்று புஸ்தகங்களும் பூர்த்தியான பிறகு வட மொழியிலுள்ள பைஷஜ்யரத் நாவளி முதலிய பல நூல்களை தொடர்ச்சியாக வெளியிடத் தீர்மானித்திருக்கிறேம். நமது வைத்திய சகோதரர்களும், அபிமானிகளும் இக்காரியத்தில் நமக்குப் போதியளவு உற்சாக மூட்டுவரென்று நம்புகின்றேம். எல்லாம் வல்ல இறைவன் இவ்வரிய காரியத்தில் நமக்குத் துணை புரிவாராக.

பத்திராதிபர்.

சென்னை-600 008.
210|67.

# சுதேச வைத்தியத்தின் பெருமை.

பொதுவில் வைத்திய நூல்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) மருந்துகள் (2) அவற்றின் செய்பாகம் (3) வியாதிகளை அறியும் வகை (4) பதார்த்த குணங்கள். எந்த முறைகளிலும் இந்நான்கு பாகங்களும் விவரமாகச் சொல்லப்படவேண்டும். அம்முறையைக் கையாளும் வைத்தியர்களும் இந்நான்கு விஷயங்களையும் சரிவர உணர்ந்தே சிகித்சை செய்யப்புகவேண்டும். இந்நான்கில் ஒன்று குறைவுபடினும் அவன் வைத்தியனாகான். இது சுதேச வைத்திய முறைக்குமாத்திரம் அவசியம் என்றும் மற்ற முறைகளுக்கு அவசியமில்லையெனவும் கூறமுடியாது. இவற்றுள் மருந்துகள் என்னும் முதல்பிரிவில் சுதேசவைத்திய முறைப்படி தயாரிக்கப்படும் மருந்துகளுக்கும் ஆங்கில முறைப்படி தயாரிக்கப்படும் மருந்துகளுக்கும் வித்தியாசத்தை கவனிப்போம். சுதேச வைத்திய முறைகளில் ஆங்கில முறையில்போல பற்பல மூலிகைகளிலிருந்தும், மரங்களின் பட்டைகளிலிருந்தும், உப்புகளை சேகரிக்கும் விதம் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச்சேகரிக்கப்படும் உப்புகளுக்கு ‘க்ஷாரம்’ எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கில வைத்தியத்தில் தற்காலம் வெகுவாக உபயோகிக்கப்படும் “சோடாவுப்பு” என்பது நமது சுதேசவைத்திய முறையில் வெகு வெகு காலமாகக்கையாளப்படும் “சத்திக்ஷாரமே.” இதுதவிர பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் உப்புகள் பல சுதேச முறைகளில் உபயோகிக்கப்படுகின்றன. அந்த உப்புகள் பலவற்றிற்கு இன்னும் ஆங்கிலத்தில் பெயர் ஏற்படவில்லை. மூலிகைகள், வேர்கள், பட்டைகள், கடைச்சரக்குகள் முதலியவைகளிலிருந்து ஆங்கிலத்தில் extract என்று அழைக்கப்படும் திரவசத்துக்கள் எடுக்கும் விதத்தையும் பலவிதமாக நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். ஆங்கிலத்தில் decoction என்று அழைக்கப்படும் பற்பல கிஷாயவகைகள், பலசூர்ணங்கள் (powder) லேகியங்கள் ஆகியவைகளும் சுதேச முறைகளில் சொல்லப்பட்டிருக்கின்

றன. இரும்பு முதலிய உலோகங்கள் முழுவதையும் சுத்திசெய்யும் விதமும் பஸ்ம சிந்தூரங்கள் செய்யும் விதமும் பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்தில் முக்கியமாக சில உப்புகளும், சில திராவகமும் பெரும்பான்மையான வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. சுதேசமுறைகளில் திராவகம் விரிவாகச் சொல்லப்பட்டாலும் அவற்றை விட decoction என்ற கிஷாயவகைகள் முக்கியமாக உபயோகப்படுகின்றன. ஆங்கில முறையில் அம்முறை பயின்றவர்களுக்கு அனுகூலமாக திராவக சத்துக்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. தூரதேசத்திலிருந்து சரக்குகளாக வருவதைவிட சத்துகளாகவருவது அனுகூலமாகவுமிருக்கிறது. ஒரு பலம் சுக்கையிடித்துக் கிஷாயம் செய்தும் ஒருபலம் சுக்கைப்போட்டு திராவகம் இறக்கியும் வியாதிகளுக்குத்தனித்தனிகொடுத்துப்பார்த்தால் எது சீக்கிரத்தில் உடம்பில் பற்றுகிறதென்பது எல்லாரும் அறியக்கூடியதே. சில அவசர வியாதிகளுக்குக்கிஷாயம் தயாராகிவருமளவு தாமதிக்கக்கூடாத காரணம்பற்றி திராவகவகை உபயோகிக்கப்படினும் உண்மையில் அவ்வப்பொழுது புதிய சரக்குகளைக்கொண்டு தயார்செய்யப்படும் கிஷாயங்களே நல்ல பலன் அளிக்கக்கூடியதென்பதைப் பலகாலும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சுதேச முறைகளில் வியாதிகளுக்கு ஏக மூலிகையால் மருந்தும் பல மூலிகைகளால் மருந்துகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சில வியாதிகளின் நிலைமைக்குத் தக்கவிதமாக சரக்குகளைக்கூட்டியும் குறைத்தும் கொள்ளவேண்டியது வைத்தியனின் கடமை. பல மூலிகைகளால் செய்யப்படும் கிஷாயம் முதலிய மருந்துகள் மிகுந்த வேகமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. ஒரே குணமுள்ள பல சரக்குகளைச்சேர்த்து உபயோகிப்பதால் மருந்தின் வேகம் அதிகப்படுகின்றது. ஒரு மருந்துக்கு வேகத்தை அதிகரிக்க சில ஸம்ஸ்காரங்கள் ஹோமோபதி என்ற முறையிலும் செய்யப்படுகின்றன. ஆகையால் பல சரக்குகளைச்சேர்த்து மருந்து செய்வதென்ற பாகத்தை விவரமறியாது சிலர் தூஷிக்கின்றனர். சரீரத்தில் ரத்த புஷ்டியுண்டாக்க முட்டை, மாமிசம்போன்ற வஸ்துக்களல்லாது வேறு மருந்து ஆங்கில முறையில் கிடையாது. மாடு ஆடு முதலிய மிருகங்களின் மாமிசத்தை திரவ ரூபமாக்கி சீசாவிலடைத்து

வெளிநாடுகளிலிருந்து வருவதுதான் ரத்தபுஷ்டி மருந்தாக ஆங்கில முறையில் உபயோகிக்கப்படுகின்றது. இதைவிட நாமே ஷிமாமிசங்களிலிருந்து பிரதிதினம் புதிதாகத் தயார்செய்து உபயோகிப்பது நலம். இளைத்த சரீரம் பெருக்க காட்ஸ்லீவர் ஆயில் என்பது வெகு சாதாரணமாக ஆங்கிலத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவும் ஒர்வித மீன்கொழுப்பு என்பது நாம் சொல்லத்தேவையில்லை. ஆகையால் சரீர இளைப்புக்கு மாமிச சம்பந்தமில்லாமல் வேறு மருந்து ஆங்கில முறையில் கிடையாதென்றே சொல்லலாம். உலோகங்களில் இரும்பை ரத்தபுஷ்டிக்காக உபயோகிக்கின்றனர். இரும்பைப் பலவிதமாக ஷி வியாதிக்கு உபயோகிக்கின்றனர். ஆனல் இரும்பு சம்பந்தமான எந்த ஆங்கில மருந்தும் குணம் குறைந்தும் துர்க்குணம் நிறைந்தும் காணப்படுகின்றது. ஷி மருந்தை உபயோகித்த சில நாட்களில் மலபந்தம், வயிற்றுவலி முதலிய பலஹிம்சைகள் உதிக்கின்றன. இரும்பை உபயோகித்தால் ஷி தொந்திரவு உண்டாவது சகஜமென ஆங்கிலவைத்தியர்கள் சொல்லுகின்றனர். ஆனல் நமது பெரியோர்கள் இரும்பில் ஷி துர்க்குணங்கள் இருப்பதாகவும் அத்துர்க்குணங்களை விலக்க வேண்டியது கடமையென்றும், அத்துக்குணங்களை நீக்காமல் உபயோகிப்பவன் மூடவைத்தியன் (quack) என்றும் சொல்லுகின்றனர். அதற்கிணங்க அயம் முதலிய உலோகங்களை அவைகளின் சுபாவ தோஷம் நீங்கிவிட முதலில் பலவகையாகச் சுத்தி செய்து பிறகு பலவகைச் சாறுகளால் அவைகளை அரைத்துத் திட்டமாகச் சிலபுடங்கள் போட்டு ரோயாளிகளுக்கு உபயோகிக்கின்றனர். அப்பொழுது ஆங்கில முறையில்போல கெடுதல் ஒன்றும் இல்லாமல் பூர்ண குணத்தைக் கொடுக்கின்றன. தவிர மேற்சொல்லிய விதம் புடம் போட்ட பஸ்ம சிந்தூரங்களைத் தேன் முதலியவைகளில் குழைத்து நாக்கில் தடவின மாத்திரத்தில் உடனே அவ்விடத்திலேயே (absorb) ரத்தத்தில் கலக்கவும் அனுகூலமாகின்றது. இதில் பிறவிதோஷம் விலகியிருப்பதால் மருந்தை நிறுத்தாமல் மாதக்கணக்காக உபயோகிக்கலாம். இவ்விதமே ஈயம் முதலிய மற்ற உலோகங்களில் பிறவிதோஷம் பல விருப்பதால் அவைகளை விலக்கச்சுத்தி செய்யவேண்டியது அவசியமாகின்றது. ஆனல் ஆங்கில முறையில் எதற்கும் சுத்திசெய்வதென்ற வழியே நாளது

வரை சொல்லப்படவில்லை. Mercury என்ற ரசம் பலவிதங்களாக சுதேச முறைகளிலும் ஆங்கில முறையிலும் கையாளப்படுகின்றது. ஆனால்சுதேசமுறைகளில்ரசத்தைச்சுத்தப்படுத்திப்பிறவிதோஷங்களை விலக்கியே உபயோகிக்கின்றனர். ஆங்கில முறையில் ரசம் உடம்பில் பற்றியதற்கு அடையாளம் வாய்வெந்து புண்ணாக வேண்டுமென்கிறார்கள். கந்தகத்தை சம்பந்தப்படுத்தினால் ரசத்தின் துர்குணம் விலகுமென்பது நாளதுவரை ஆங்கில முறையில் கண்டுபிடிக்கப்பட வில்லை.

"பிரயோக: சமயேத் வியாதிம் யோந்யமந்யமுதீரயேத்
நாஸௌ விசுத்த: சுத்தஸ்து சமயேத் யோந கோபயேத்"

நோயாளிகளுக்கு ஔஷதம் கொடுத்தால் வியாதி தணிய வேண்டும். ஒரு வியாதிக்காக உபயோகிக்கும் மருந்து மற்றொரு வியாதியை உண்டுபண்ணில் அது உயர்ந்த முறைபல்ல. உபயோகிக்கும் ஔஷதம் வியாதியைத் தணிப்பதுடன் மற்றொரு வியாதியை உண்டுபண்ணாமலிருக்க வேண்டும். அதுதான் உயர்ந்த முறையென்று நமது பெரியோர்கள் கூறுகின்றனர். ஆங்கிலமுறையில் பெரும்பான்மையான ஔஷதங்கள் மற்றொரு வியாதியை உண்டுபண்ணாமலிருப்பதில்லை. ஆங்கில வைத்தியர்கள் பலஔஷதங்களின் துர்க்குணங்களை reaction (கிளறிவிடுதல்) என்ற பெயரைக்கொண்டு மறைக்கின்றனர். சுதேச வைத்தியர்கள் ஏதாவது தடுமாற்றத்தால் மருந்துகளை உபயோகித்து மேற்கண்ட அவஸ்தை நேரிடின் அப்பொழுது அவர்களை quacks (மூடவைத்தியர்) என்கின்றனர். வெள்ளைப் பாஷாணம் (arsenic) தாளகம் (yellow arsenic) முதலிய பாஷாணச்சரக்குகள் சுதேச முறைகளில் வெகுவாக உபயோகப்படுகின்றன. முதலில் அவைகளைத் தகுந்தவிதம் சுத்திசெய்து இயற்கை துர்க்குணங்களைமாற்றி புடம் போட்டுப் பிறகு உபயோகிக்கப்படுகின்றது. இவ்விதம் தயார் செய்யப்படும் ஔஷதங்கள் மாதக்கணக்கில் உபயோகித்தும் துர்க்குணம்செய்யாமலிருப்பதை நேரில் காணலாம். ஆங்கில முறையில் வெள்ளைப் பாஷாணம் பல வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. பாஷாணங்களை உபயோகிக்கும்போது கண் சிவந்தாலும், மூத்திரம்

குறைந்தாலும் அல்லது சிவந்தாலும் இதுபோன்ற துர்க்குணங்கள் காணப்பட்டால் உடனே மருந்தை நிறுத்தி நோயாளிக்குப் பேதி மருந்தைக் கொடுத்துக் குடலை சுத்தம் செய்து கொஞ்சநாள் தாமதித்துப் பிறகு மருந்துகளைக் கொடுக்கவேண்டுமென்று ஆங்கில முறையில் சொல்லப்படுகின்றது. இவைகளுக்குக் காரணமான பிறவி துர்க்குணம் நீங்க வழிகண்டுபிடிக்கப்படவில்லை. சகல விஷச் சரக்குகளையும் சுத்திசெய்து சாந்தமாக்கி உபயோகிக்கும் சுதேச வைத்தியமுறை உயர்ந்ததா? அல்லது அகப்பட்ட சரக்குகளை அப்படியே உபயோகித்துப் புதுப்புது வியாதிகளை உண்டுபண்ணிப் பிறகு சமாளிக்கும் முறை உயர்ந்ததாவென மத்யஸ்தர்களே நிர்ணயிக்குமாறு நாம் இதோடு நிறுத்திக்கொள்ளுகிறோம்.

இவ்விஷயமாகச் சில ஆங்கில வைத்திய நிபுணர்கள் கூறும் அபிப்பிராயத்தையும் சற்று கவனிப்போம்.

Medico-chirurgical Review என்றவைத்தியப்பத்திரிகையின் ஆசிரியரான James Jonson M. D. F. R. S. என்பவர் கூறுவதாவது.

"I declare as my conscientious conviction, founded on long experience, that, if there was not a single physician, surgeon, manmidwife, chemist, apothecary, druggist, nor drug, on the face of the earth, there would be less sickness and less mortality than now prevail"

"உலகினில் வைத்தியன், சர்ஜன், மருந்து முதலியன ஒன்றுமே இல்லாவிடில் தற்காலமிருப்பதை விட நோய் குறைந்தும், மரணவிகிதம் தணிந்தும் போசுமென்பது என்னுடைய நீண்டகால வைத்திய அனுபவத்தால் ஏற்பட்ட மனப்பூர்வமான தீர்மானமென்பதை உறுதியாகச் சொல்லுவேன்"

Osten B-யில் M. D. பரீக்ஷை தேர்ந்த டாக்டர் Francis Goggs well M. D. கூறுவதாவது:—

"It cannot answer to my conscience to withhold the acknowledgment of my firm belief, that the medical pro-

fession (with its prevailing mode of practice) is productive of vastly more evil than good and were it absolutely abolished, mankind would be infinitely the gainer"

"தற்காலம் உலகினில் கையாளப்படும் சிகித்சைக் கிரமமானது நன்மையைவிடத் தீமையையேமிகுதியாக உண்டுபண்ணுகின்றது. இந்தச்சிகித்சாக் கிரமத்தை அடியோடு தொலைத்து விட்டால் மானிட சமூகத்திற்கே ஓர் பெருத்த நன்மை உண்டாகும். இந்த உறுதியான என் அபிப்பிராயத்தை மறைக்க என் மனசாக்ஷி ஒவ்வாது."

The History of Medicine என்ற புத்தகத்தின் ஆசிரியரான டாக்டர் Bostock என்பவர் கூறுவதாவது :—

"our actual information on knowledge of disease does not increase in proportion to our experimental practice. Every dose of Medicine given is a blind experiment on the vitality of the patient"

"நாம் செய்துவரும் பரீக்ஷார்த்த முறைக்கு (ஆங்கில வைத்தியம் முழுவதும் பரீக்ஷார்த்த முறை எனப் பொருள்) எற்றபடி வியாதிகளைப்பற்றி தத்வக்கியானம் நமக்குப் பெருகவில்லை. (அதாவது பிரதிதினம் பரீக்ஷை பார்த்தவண்ணமாக விருந்தாலும் வியாதிகளின் உண்மையான நிலைமையைக்கண்டறிய முடியவில்லை) நாம் கொடுக்கும் ஒவ்வொரு வேளை மருந்தும் நோயாளியின் ஜீவநாடியை உலைவைக்கச்செய்யும் குருட்டுத்தனமான பரீக்ஷை முறையாகவே யிருக்கின்றது."

Physiology என்ற உடற்கூறு சாஸ்திரத்திலும் Pathology என்ற வியாதிக்கூறு சாஸ்திரத்திலும்கியாதிவாய்ந்த பிரஞ்சு வைத்திய நிபுணர் M. Magendie என்பவர் கூறுவதாவது :—

" Let us no longer wonder at the lamentable want of success which marks our practice, when there is scarcly a sound physiological principle among us, I hesitate not

to declare, no matter how sorely I shall wound our vanity, that so gross is our ignorance of the real nature of the physiological disorder called disease, that it would perhaps be better to resign the complaint into the hands of nature, than to act, as we are frequently compelled to do, without knowing the why and the wherefore of our couduct at the obvious risk of hastening the end of the patient."

" நமது வைத்தியர்களுள் உடற்கூறு சாஸ்திரம் நன்கு அமைபப்பெறவில்லை. ஆகையால் நாம் கையாளும் சிகித்ஸா முறையில் சித்தியில்லாமல் நாம் அபரிமிதத் தோல்வியடைவதில் ஆச்சரியப்பட நியாயமில்லை வியாதியென அழைக்கப்படும் சரீர இயற்கை மாறுபாடுகளின் உண்மை நிலைமையை நாம் கொஞ்சமும் அறிவதில்லை. நோயாளியின் முடிவுகாலத்தை நாம் துரிதப்படுத்துகிறோம் என்பது வெட்ட வெளிச்சம். என் செய்கிறோம்? எதற்காகச் செய்கிறோம் என்பது தெரியாமலேயே அடிக்கடி இக்காரியத்தைச்செய்ய நிர்பந்திக்கப்படுகிறோம். இப்படி நாம் செய்வதைக் காட்டிலும் (மருந்தைக்கொடுக்காமல் நிறுத்திவிட்டு) நோயை அதன் போக்கில் விட்டுவிடுவதே நலம். இவ்விதம் நான் சொல்லுவது நமது வைத்தியர்களுடைய தற்பெருமையை மிகவும் பாதித்தாலும் எனக்கு அது பொருட்டல்ல. இவ்வுண்மையை வெளியிட நான் தயங்கமாட்டேன்.

கிரந்த கர்த்தாவும் வைத்தியருமான ஓர் ஐரோப்பிய டாக்டர் Frank என்பவர் கூறுவது :—

" Assuredly, the uncertain and most unsatisfactory art, that we call medical science, is no science at als, but a jumble of inconsistent opiniones, of conclusion-hastily and often incorrectly drawn, of facts misundl erstood or perverted, of comparisons without analogy, of hypothesis without reason, and theories not only useless but dangerous. "

" ஓர் உறுதியில்லாததும் அதிருப்திகரமாயுமுள்ள ஓர் வித்தையை நாம் வைத்ய சாஸ்திரமென அழைக்கிறோம். நிச்சயமாக இது ஒரு சாஸ்திரமல்ல, ஆனால் முரண்பட்ட பல அபிப்பிராயங்களும், அவசரப்பட்டும்தவறுதலாகவோ அல்லது விபரீதமாகவோ கிரஹித்த பல தத்வங்களும், சம்பந்தமில்லாத பல உதாஹரணங்களும், தகுந்த காரணமில்லாத பலவித ஊகங்களும், உண்மையில்லாதது மாத்திரமின்றி அபாயகரமாகவுமுள்ள பல கொள்கைகளும் அடங்கியது."

Dr. Ramage, fellow of Royal College, London :— சீமையில் ராயல் காலேஜில் படித்துத் தேர்ந்த டாக்டர் Ramage என்பவர் கூறுவது :—

It cannot be denied that the present system of medicine is a burning shame to its professors, if indeed a series of vague and uncertain incogruities deserves to be called by that name. How rarely do our medicines do good! How often do they make our patients really worse! I fearlessly assert that, in most cases, the sufferer would be safer without a physician, than with one."

" தெளிவாகச் சொல்லப்படாமலும் ஓர் உறுதியில்லாமலும் முன்பின் ஒத்துக்கொள்ளாமலும் இருக்கும் தற்கால வைத்திய முறையை வைத்திய சாஸ்திரமெனக் கூறுவதானால் அதைப் படித்த வைத்திய நிபுணர்களுக்கு அது சகிக்கவொண்ணாத அவமானமாகுமென்பது மறுக்கக்கூடாத விஷயமாகும். உண்மையில் மிக மிக அபூர்வமாகவே நமது மருந்துகள் நன்மையைக் கொடுக்கின்றன. அடிக்கடி நமது மருந்துகள் நோயாளியை இன்னும் கீழான நிலைமைக்கே கொண்டுவந்து விடுகின்றன. அனேகம் கேசுகளில் நோயாளி வைத்தியனிடம் சிகித்சை பெறுவதை விட சிகித்சை பெறுமலிருப்பதே நலமென நான் தைரியமாக உறுதி சொல்லுவேன்.

Benjamin Rush, M. D., formerly Prefessor in Fist Medical College, Philadelphia.

டாக்டர் Benjamin Rush M. D. கூறுவதாவது:—

" Dissections daily convince us of our ignorance of disease, and cause us to blush at our prescriptions. What mischiefs have we not done, under the belief of false facts and false theories ! We have assisted in multiplying diseases. We have done more. We have increased their fatality."

" பிணங்களை அறுத்துப்பார்க்கப் பார்க்க வியாதிகளில் நமக்கிருக்கும் மூடத்தனம் பிரதிதினம் வெளிப்படுகின்றது. நாம் கொடுத்த ஔஷதங்களை நினைக்க நினைக்க வெட்கம் மேலிடுகின்றது. பொய்யான தத்வங்களையும் பொய்யான கொள்கைகளையும் நம்பி எந்தெந்தக் கெடுதலை நாம் செய்யாமல் விட்டோம்! வியாதிகளைப் பெருக்கவே நாம் சகாயம் செய்தோம். ஒவ்வொரு வியாதியையும் விருத்தி செய்தோம். ஒவ்வொரு வியாதியிலும் மரண விகிதம் அதிகரிக்கச் செய்தோம்."

Prof. Evans, fellow of the Royal College, London, ப்ரொபசர் Evans என்பவர் கூறுவதாவது :—

"The medical practice of our day is at the best a most uncertain and unsatisfactory system ; it has neither philosophy nor common sense to commend it to confidence."

" தற்காலம் நாம் கையாளும் வைத்தியமுறை கொஞ்சமேனும் உறுதியில்லாததும் அதிருப்திகரமானதுமான ஓர் முறையாகும். இதில் நம்பிக்கைகொள்ளும்படி தத்வங்களும் விசேஷ அறிவும் கிடையாது."

Dr. Baillie of London:-டாக்டர் Baillie கூறுவதாவது:-

" I have no faith whatever in medicine"

" எனக்கு வைத்திய சாஸ்திரத்தில் சற்றும் நம்பிக்கை கிடையாது "

சென்னை-600 008.

Prof. E. H. Davis, M. D. New York Medical College.

ப்ரொபசர் E. H. Davis, M. D. என்பவர் கூறுவதாவது:-

"The vital effects of medicine are very little understood. It is a term used to cover our ignorance."

"மருந்துகளின் ஜீவாதாரகுணங்கள் கொஞ்சமும், அறியப்படவில்லை. நமது முட்டாள்த்தனத்தை மறைக்க இது ஓர் பரிபாஷை"

Prof. Alonzo Clark, M. D. கூறுவதாவது:—

"In their zeal to do good, Physicians have done much harm. They have hurried many to the grave, who would have recovered, if left to nature. All our curative agents are poisons, and as a consequence, every dose diminishes the patient's vitality"

"நோயாளிகளுக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்ற அவா மிகுந்து வைத்தியர்கள் மிகத்தீங்கையே இழைக்கின்றனர். மருந்து கொடாமலிருந்தால் தானாக நாளடைவில் கால சுபாவத்தால் சௌக்கியத்தையடையக்கூடிய பல நோயாளிகளை இவர்கள் மருந்து கொடுத்து மயானத்திற்கு அனுப்பி விடுகின்றனர். வியாதிக்குக் கொடுக்கக்கூடிய நமது ஔஷதம் முழுமையும் விஷமே. ஆகையால் ஒவ்வொருவேளை மருந்தும் நேயாளியின் ஜீவசத்தைக் குறைக்கின்றது"

மேற்கூறியவர்கள் ஐரோப்பாவிலேயே பிறந்து வளர்ந்து ஆங்கில வைத்தியத்தில் பெரிய பரிக்ஷையில் தேறி பட்டமும் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் முறையைப்பற்றி கூறும் விஷயங்களை யாருமே சந்தேகிக்க முடியாது. அவர்கள் தங்கள் முறைகளில் கூறும் குற்றத்திற்குக் காரணம் யாதென ஆராய்வோம். ஆங்கில முறையில் மருந்துகள் மனிதன் சரீரத்திற்கு எற்றவைகளா? அவைகளால் சரீரத்திற்கு தீங்கு நேரிடாதா வென்பதை கவனிப்பதில்லை. வியாதியை நிவர்த்தித்தால் போதுமென நினைக்

கின்றனர். பாஷாணம் முதலிய பிறவிச் சரக்குகளில் துர்க் குணத்தை விலக்க வழியும் தெரியவில்லை. சில வியாதிகளுக்கு இவைகள் முக்கியமானவையென நினைத்துக் கூசாமல் உபயோகித்து விடுகின்றனர். அவைகளை சுவல்ப அளவில் உபயோகிப்பதால் உடனே மிகுந்த துர்க்குணத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் அவை உடனே உடம்பில் (assimilate) ஜீர்ணமாவது மில்லை. நாளடைவில் அவை பலப்பெற்று பெருத்த வியாதிகளை உண்டாக்குகின்றன. Tartar emetic போன்ற மருந்தை நீண்ட காலம் உபயோகித்து அதனால் பல புதிய பெரும் வியாதிகள் நேர்ந்ததை நாம் கண்டிருக்கிறோம்.

இவ்விதம் புது வியாதிகள் பல தோன்றுவதற்கு ஔஷதமே காரணமென்பதை மறுக்கமுடியாது. ஆகையால் ஔஷதங்களால் வரும் கேட்டையுணர்ந்துதான் முன் சொல்லப்பட்டவர்கள் ஆங்கில வைத்தியத்தை இகழ்ந்தனரெனக் கூசாமல் கூறலாம். ஆனால் சுதேச முறைகளில் இவ்விதம் சரீர இயற்கைக்கு விருத்தமாக ஔஷதம் ஒன்றுமே சொல்லப்படவில்லை. சரக்குகளின் பிறவித் துர்க்குணம் விலகும்படிச் செய்த பிறகே அவைகள் உபயோகப் படுத்தப்படுகின்றன. மருந்துகளிலும் துர்க்குணம் விலகுவதும் அமிர்தகுணம் வருவதும் சகஜமே. இதுகாரணம் பற்றியே சில ஆங்கில மேதாவிகள் சுதேச முறைகளைத் தோத்திரம் செய்திருக்கின்றனர்.

George H. Clarke M. A. M. D. கூறுவதாவது:—

"As I go over each fasciculus, I always arrive at one conclusion and that is this: If the physicians of the present day would drop from the pharma copoeia all the modern drugs and chemicals, and treat the patients according to the method of Charaka, there would be less work for the undertakers and fewer chronic invalids in the world."

"நான் ஒவ்வொரு பாகத்தையும் படிக்கப்படிக்க நான் அடியிற்கண்ட ஒரே தீர்மானத்திற்கு வருகிறேன். அதாவது—தற்

காலம் இருக்கும் ஆங்கில வைத்தியர்கள் தங்கள் வைத்திய புஸ்தகங்களைத் தொடாமலும், ஆங்கில மருந்துச் சாக்குகளும் மருந்துகளும் மறைந்துபோய் சரகருடைய வழியைப் பின்பற்றியே நோயாளிகளும் சிகித்சை செய்யப்பட்டால் வைத்தியர்களுக்கு சிரமம் குறைவதுடன் உலகத்தில் நீடித்த நோயாளிகளும் குறைவார்கள்"

மற்றொரு ஆங்கில வைத்திய நிபுணர் கூறுவதாவது:—

"In medicine you are still more advanced. In the west it is by no means a science but largely a guess work. Indian medicine both of the Hindus and Muhommodans is superior to the medicine of the West."

"வைத்திய சாஸ்திரத்தில் இந்தியர்கள் அதிகமாக மேம்பாடு அடைந்தவர்கள். ஆங்கில வைத்தியம் ஒரு சாஸ்திரமல்ல. பெரும்பான்மையும் ஊகத்தால் ஏற்படுத்தப்பட்டது. இந்துக்கள், மகமதியர்கள், இவர்களுடைய வைத்திய முறை ஆங்கில முறையைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தது"

Col. W. G. King. C. A. E, I. M. S. கூறுவதாவது:—

"The Institutes (Indian Medical) fit in excellently with the Bacteriology and applied hygiene of the West. The hygiene of food and water, public conservency, disease suppression and prevention are all carefully dealt with"

"இந்திய சுதேச வைத்திய நூல்களும் ஆங்கில நூல்களைப்போல சுகாதார சாஸ்திரத்திலும் கிருமி சாஸ்திரத்திலும் தத்வங்களை யுணர்த்துகின்றது. தண்ணீர் ஆகாரம் இவைகளின் சுகாதார விதிகளையும், மற்றும் இதர சுகாதார வசதிகளையும், வியாதியை விலக்கும் வகையையும் தணிக்கும் வகையையும், சுதேச நூல்கள் கூர்மையாக உபதேசிக்கின்றன."

இவ்விதம் பல நிபுணர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். அவை அனாவசியமானதுபற்றி நாம் இங்கு கூறவில்லை.

உ

# ஔஷத சாரம்.

சுதேசவைத்திய நூல்களிலிருந்து கோர்க்கப்பட்ட
பல அனுபவ வைத்திய முறைகள் அடங்கியது.

பண்டிட் S. நாராயண அய்யங்கார்
அவர்களால் இயற்றப்பட்டது.

---

கிடைக்கும் இடங்கள்:—

பண்டிட் S. நாராயண அய்யங்கார்,
2 நிர். போலீஸ்டேஷன் மேல்புரம் சந்து,
மதுரை.

---

T. S. சுப்பிரமணியம்,
ஆயுர்வேத வைத்தியர்
35 நிர் காக்காத்தோப்புத் தெரு,
மதுரை.

---

மதுரை காக்காத்தோப்புத் தெரு,
வேங்கடேஸ்வர்பிரசில் பதிப்பிக்கப்பட்டது.
(மதுரை—1938.)

# ஔஷத சாரம்.

ஆங்கில வைத்திய நூல்களில் மருந்துகளைச்செய்யும் விதங்களை வர்ணிக்கும் பாகத்திற்கு Pharma copea (பார்மகோபியா) என்றும், மருந்துகளின் குணம், உபயோகம், அளவு, உபயோகிக்கும் விதம் இவைகளைப்பற்றிச் சொல்லும் பாகத்திற்கு Materia Medica (மெடீரியா மெடிகா) என்றும், மருந்துகள் சரீரத்தில் பரவி எவ்விதம் ரோக பரிகாரங்களைச் செய்கிறது என்ற விவரத்தைக் கூறும் பாகத்திற்கு Theraupatics (திராபடிக்ஸ்) என்றும் சொல்லப்படுகின்றது. இவ்விதமே சுதேச நூல்களிலும் இந்த பேதங்கள் இருந்தபோதிலும் சில கிரந்தங்களில் தனித்தும் சிலவற்றில் சேர்த்தும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் பதார்த்தங்களின் குணபாடங்கள் தனித்தும் மற்ற இரண்டும்சேர்ந்துமே பிராசீன கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கின்றன. ராஜ நிகண்டு, தன்வந்தரி நிகண்டு, திரவ்ய குணம், முதலிய நூல்கள் தனியாக பதார்த்த குணங்களை விவரிக்கின்றன. சார்ங்கதர ஸம்ஹிதை, பிருந்த மாதவப், சக்ர தத்தம், முதலிய வடமொழி நூல்களும், தேரையர், அகஸ்தியர், புலிப்பாணி முதலிய தென்மொழி நூல்களும் மற்ற இரண்டு வர்க்கங்களையும் சேர்த்துச் சொல்லுகின்றன. ஆனால் Theraupatics (திராபடிக்ஸ்) என்ற ரோகபரிகாரவிதம் ஆங்கிலத்தில் போலன்றி சுதேச நூல்களில் வேறு விதமாகச்சொல்லப் பட்டிருக்கின்றது. ஆங்கில நூல்களில் கண்டுபிடித்த மட்டில் ஒவ்வொரு மருந்தும் சரீரத்தில் வியாபித்து அந்தந்த உறுப்புகளில் காட்டும் நிலைமை வர்ணிக்கப்படுகின்றது. சுதேச நூல்களில் ஒவ்வொருமருந்தும் சரீரத்தில் வியாபித்து திரிதோஷ நிலைமைகளில் காட்டும்வேறுபாடுகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நட்டாமுட்டியாக சுதேச வைத்தியர்கள் மருந்து கொடுப்பதாகச் சொல்லுவது கொஞ்சமும் பொருந்தாது. தவிர நட்டாமுட்டியாக மருந்து கொடுப்பதென்பது ஆங்கில வைத்தியத்தில் இல்லாமல் இருக்கவில்லை. கொய்னா மலேரியா பூச்சிகளைக்கொல்லும் சக்திவாய்ந்ததாகையால் மலேரியா காய்ச்சலில் உபயோகிப்பது சாஸ்திரீயமான போதிலும் மற்றும் சில காய்ச்சலிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த காய்ச்சலில் கொய்னா எவ்விதம் பரிகாரம் செய்கிறதென்பது கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் காய்ச்சல் மாத்திரம்

தணிந்து விடுகிறதென்பதைக் கண்டு நட்டா முட்டியாகவே உபயோகிக்கப்படுகின்றது. இத்தலைப்பின்கீழ் சொல்லப்படும் மருந்துகள் முழுவதும் பலதடவை செய்து அநுபவத்தில் குணம் கண்டவை சுதேச நூல்களில் பல ஔஷதங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் அவை முழுவதையும் நாம் இங்கு எழுதுவதாக நினைக்க வில்லை. அநுபவத்தில் தீர்மானமாக குணம் கண்டவைகளையே எழுதுகின்றோம். வடமொழி நூல்களிலிருந்து சில மருந்துகளும் தென்மொழி மருந்துகளும் இவைகளின்றி குருமுகமாக கிடைத்தவைகளையும் சேர்த்து எழுதுகிறோம். வைத்திய சாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் வியாதிக்கிரமங்களை யனுசரித்தே இவ்விடத்திலும் அத்தியாயம் ஆரம்பிக்கப்படும். ஒவ்வொரு வியாதியையும் தனித்தனி அத்தியாயமாக பிரித்து எழுதுகின்றோம். இவ்விடத்தில் சொல்லப்படும் மருந்துகள் கைவசமிருந்தால் எந்த வியாதியையும் சமாளிக்க முடியும். மருந்துகள் மாத்திரம் தெரிந்து கொள்வது போதுமானதன்று. அவைகளை உபயோகிக்கும் அநுபவமும் வேண்டியது அவசியமென்று எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாகின்றது. பஸ்ம சிந்தூரங்கள் செய்யும் விதங்களையும் கூடிய மட்டில் தெளிவாகச் சொல்லுவோம். ஆனால் நேரிலேயே காட்டக் கூடிய சில முறைகள் அவைகளில் உண்டு. ஏனெனில் சில மூலிகைகளுக்கு உலக வழக்கத்தில் பெயர் கிடையாது. சில முறைகளில் கவசம் செய்யும் அளவும் புடம் போடும் அளவும் நேரிலேயே காட்ட வேண்டியதாகின்றது. ஆகையால் இவ்வித நிர்பந்தமில்லாமல் எல்லாருக்கும் சுலபமாக கிடைக்கக்கூடியதும் செய்யக்கூடியதுமாகிய பஸ்ம சிந்தூர முறைகளை மாத்திரம் இங்கு சொல்லுவோம். ஆகையால் இங்கு சொல்லப்படும் எல்லா மருந்துகளையும் சம்சயமின்றி யாரும் செய்யலாம். அதுபோலவே மருந்தையும் உபயோகிக்கலாம். இம்மருந்துகள் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு குந்தகமும் விளைவிக்காமலும் வேறு ஹிம்சையை உண்டுபண்ணாமலுமிருக்கும் என்பதை உறுதியாகச் சொல்லலாம். ஆகையால் இது வைத்தியர்களுக்கு மிகவும் சிறந்த உதவியாகுமென்று நம்புகிறோம்.

பண்டிட் நாராயணய்யங்கார்,
பத்திராதிபர்,
வைத்திய சந்திரிகா, மதுரை.

# ஜ்வரம்.

---

(1) வெள்ளைப்பாஷாண பஸ்மம்:—இது காய்ச்சல் முதலியபல வியாதிகளில் உபயோகமாகின்றது. வெள்ளைப்பாஷாணம் என்பது கடைச்சரக்கு. இதைப்பலவழிகளால் பஸ்மம் செய்யக்கூடும் கத்திப் பட்டை இலை முதலியவைகளால் கஜபுடத்தில் பஸ்மமாகும். ஆனல் அந்த மூலிகை சுலபமல்ல. இது நெருப்புக்கு நிற்காமல் ஓடிவிடும் என்பது எல்லாருமறிந்தது. எல்லாரும் செய்யக்கூடியவழியில் பஸ்ம முறை சொல்லுகின்றோம். அப்ராகத்தில் பலஜாதி கடையில் கிடைக் கும். அவற்றுள் வெளுப்பு ஜாதியை வாங்கவும். அதிலும் கையகல முள்ள தகடுகளாக வாங்கவேண்டும். சிறிய துண்டுகள் பிரயோஜனப் படா. ஆகையால் அதை நாமே நேரில் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத்தகட்டை புரைபுரைகளாகப் பெயர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது ஒரே தகட்டை அகல நீளம்குறையாமல் மெல் லிய தகடுகளாக கையாலேயே கிழித்துக்கொள்ளவும். விளைவு நன்ருக இராத சில தகடுகள் ஒரே கல்லாக இருக்கும். அதை அவ்விதம் கிழிக்கமுடியாது. விளைந்த அப்பிரகத்தை நாலைந்து தகடுகளாகக் கிழிக்கலாம் ஒரே தகட்டை கையிலெடுத்துப் பார்த்தாலே அதன் அள்ளைப்பக்கங்களில் புரைகள் இருக்கும். அந்த அடையாளத் தைக்கொண்டு கிழிக்கவும். கூடிய மட்டில் அகல நீளமுள்ளவை களாக இருக்கவேண்டும். சிறிய துண்டுகளைத் தள்ளிவிடவும். பிறகு சுமார் நான்கு படி (சின்னபடி) பிடிக்கக் கூடிய ஓர் புதுச்சட் டியைக் கொண்டுவந்து அதன் பின் புறத்தில் சிறிய தமர்கள் (ஓட் டைகள்) போடவேண்டும். அதாவது சட்டியை கவிழ்த்து பூமி யில் வைத்துக்கொண்டு பின் புறத்தில் நடுவில் மூன்று அங்குல சது ரத்தில் கூர்மையான இரும்பு ஆணிகளைக்கொண்டு சல்லடைக்கண் கள்போல சிறிய துவாரங்கள் வட்டமாகப் போடவேண்டும். ஆணி யைக்கொண்டு குடைந்தால் சிறிய துவாரம் விழும். அதிகம் அழுத் தினல் சட்டி உடைந்துவிடும். ஆகையால் நிதானமாகத்தயார் செய்து கொள்ளவும் இவ்விதம் தயார் செய்து கொண்ட சட்

டியைப் பல தடவைகளுக்கும் உபயோகிக்கலாம். உளுத்தம் பருப்பை ஜலம்விட்டு மாவாக அரைத்துக் கொள்ளவும். அதிக ஜலம் விடாமல் மொத்தையாக இருக்கும்படிச் செய்து கொள்ளவும். ஓட்டைவிட்ட சட்டியை நிமிர்த்து அப்பிரகத் தகடுகளை அந்த துவாரங்களில் பரப்பி அப்பிரகத்தகடுகள் ஒன்றுக் கொன்று பதியும்படி உளுத்தம்மாவைப் பூசவேண்டும். நடுச்சட்டியில் ஒரே தகடாக அதாவது சந்துவாய்கள் இராமல் போட்டு நாலுபக்கம் சந்துகளுக்கு உளுத்தம்மாவைப் பூசவேண்டும். பிறகு வெய்யிலில் காயவைக்கவும். பிறகு வேண்டிய அளவு வெள்ளைப் பாஷாணத்தை சட்டியில் நடுத்தகட்டில் வைக்கவும். பிறகு ஈய சிந்தூரத்தை பாஷாணம் முழுகும்படி போடவும். ஈய சிந்தூரமென்பது கடையில் ஏராளமாகக்கிடைக்கும். குங்குமம் விற்கும் கடையில் இது கிடைப்பது வழக்கம். பாஷாண்ம் நாலு பக்கமும் உச்சியும் தெரியாமல் ஈய சிந்தூரத்தைப்போடவும். பருமனைப் போடவேண்டிய அவசியமில்லை. இலேசாக இருந்தால் போதுமானது. பிறகு சட்டிக்கு மேல் ஓர் வாணலை (சின்ன சட்டியை) கவிழ்த்து மூடி இரண்டு வாய்களும் பொருந்தும்படி சீலைமண்செய்யவும். ஈரம் காயவேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது அடுப்பேற்றி முதலில் சிறு தீயாக அரை மணி நேரமும் பிறகு அதிகத்தீயாக அரை மணியும் எரித்து ஆறிய பிறகு மேல் சட்டியை எடுத்துவிட்டு உள் சட்டியிலிருக்கும் ஈய சிந்தூரத்தைத் தள்ளிப்பார்த்தால் பாஷாணம் உருகி ஒரே கட்டியாகச் சட்டியிலிருக்கும். ஈயசிந்தூரம் விலகும்படி துடைத்து விட்டு அந்தக் கட்டியைக் கல்வத்திலிட்டுச் சுண்ணாம்பு நீரால் அரைத்து பில்லை தட்டி வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும். சித்திரைமூலம் பச்சையாகக் கொண்டுவந்து சிறு பில்லைகளாக நறுக்கி சுவல்ப ஜலம்விட்டு அம்மியில் அரைக்கவும். அரைக்கும் பொழுதாவது அல்லது விழுதையாவது கையால் தொட்டால் கை கறுத்துப்போகும் ஒரு தோல்கழண்டு பிறகு தன் நிறம் வரும். ஆகையால் கைகளில் படாமல் ஜாக்கிரதையாக அரைக்க வேண்டும். அந்த மொத்தையில் இந்த பில்லைகளை மறைக்கவேண்டும். அதாவது பில்லைகளின் நான்கு பக்கங்களிலும் அரை அங்குலம் அளவுக்குக்குறையாமல் மேற்படி விழுது இருக்கவேண்டும்.

பிறகு வெய்யிலில் நன்ருகக்காயவைக்கவேண்டும். பிறகு அதை அகலில்போட்டு மேல் அகல் மூடி சீலேமண் செய்து வெய்யிலில் காயவைக்கவேண்டும். பிறகு அதை வாரகபுடம் போடவும். அதாவது ஒரு முழம் உயரம் ஒரு முழம் அகலம் முட்டைகளே அடுக்கி அதன் நடுவில் சட்டியைவைத்து நெருப்பிடவும். அதாவது அரை முழம் உயாம் முட்டைகளே பரப்பி நடுவில் சட்டியைவைத்து மறுபடியும் அதன்பேரில் மற்றும் அரை முழம் முட்டைகளேயும் பரப்பி நெருப்பிடவும். இந்தப் புடத்திற்கு வாரகபுடம் என்று பெயர். ஆறிய பிறகு சட்டியை எடுத்து உள்ளிருக்கும் சித்திரைமூல கவசத்தை உடைத்து அந்த பில்லேகளேப்பொடிசெய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். இது வெள்ளேப்பாஷாண பஸ்மம். வைத்த இடை குறையாது. எவ்வளவு பெரிய புடமானுலும் நெருப்புக்கு ஓடாது. இந்த அளவுபுடம் போடுவது முறை.

சீலேமண் செய்யும் விதம் :— புத்துமண் அல்லது செம்மண்ணே ஜலம் விட்டு அரைத்து இரண்டு விரல் அகலம் ஒரு முழம் அல்லது அதற்கு அதிகமான நீளமுள்ள துணித்துண்டுகளே மேற்படி மண்ணில் பிரட்டிச்சுற்றவேண்டும். ஏழுதடவை சுற்றவேண்டும். ஒவ்வொரு சுற்றிலும் மண்ணேப்பூசிக்கொள்ளவேண்டும். சீலேமண் செய்யவேண்டிய எல்லா இடங்களிலும் இவ்விதமே செய்யவேண்டும். வெய்யிலில் நன்ருகக்காயவைத்துவிடவேண்டும்.

குறிப்பு:— சித்திரைமூலத்தில் பலவகையுண்டு. அதில் ஒவ்வொன்றுக்கும் குணத்தில் வித்தியாசமுண்டு. புஷ்பம் சிலவற்றிற்கு வெளுப்பாகவும், மஞ்சளாகவும், சிகப்பாகவும், கறுப்பாகவும், இருக்கும். இத்தப்பக்கங்களில் வெள்ளேப்புஷ்பமுள்ள சித்திரைமூலம் சுலபம். இதற்கே கொடுவேலி யென்று பெயர். இதில் எந்த ஜாதியையும் இவ்விடத்தில் உபயோகித்துக்கொள்ளலாம் கவசம் என்றுல் போர்வையெனப் பொருள். மூலிகை முதலியவைகளின் விழுதால்மருந்தை மறைப்பதற்குக்கவசம்எனக்கூறுவார்கள். சித்திரைமூலத்தை அரைப்பது சற்று கடினம். குழி அமி என்ற

கல்வத்திலிட்டு அரைப்பது அசாத்தியம். ஆகையால் அம்மியில் வைத்து அரைத்துக்கொள்வது நல்லது. புடம்போட்டு ஆறியபிறகு கவசம் கறுப்பாக இருக்கும்.

சுத்தி முறை:— வெள்ளைப் பாஷாணத்தைச்சுத்தி செய்தே பஸ்மம்செய்ய வேண்டும். கஜபுடம் போடுவதால் சுத்தியில்லாவிட்டாலும் தோஷமில்லையென்று சிலர் சொல்லுவது உண்டு. ஆனல் அனுபவத்தில் சுத்தியான பிறகு செய்யப்படும் பஸ்மம் மிகுந்த குணம்வாய்ந்ததாக இருக்கின்றது. ஆகையால் ஒவ்வொரு விஷச் சாக்கையும் சுத்தி செய்துவிடுவதே நல்லது. பாஷாணம் ஒரேகட்டியாக இருந்தால் சுத்திசெய்வதற்கு அநுகூலமாகவிருக்கும். ஒரு சட்டியில் ஒருபடி சுண்ணும்புக்கலைப்போட்டு நான்கு அல்லது ஐந்து படி நீர்விட்டு பிறகு வெள்ளைப் பாஷாணத்தை ஒரு வெள்ளைத்துணியில் நன்ருக முடிந்து சட்டி நீருக்குள்போட்டு அடுப்பில்வைத்து விடாமல் ஒருமணி நெருப்பு எரிக்கவும். குளிர்ந்த பிறகு முடிப்பையெடுத்து அவிழ்த்து பச்சை நீரில் பாஷாணக்கட்டியைக்கழுவி எடுத்துக்கொள்ளவும். சுத்தியாகும். பாஷாணத்திலிருக்கும் விஷ நீரை சுண்ணும்பு இழுத்துவிடுகின்றது. தாளகம் முதலியவைகளில் இருக்கும் விஷ நீரையும் சுண்ணும்பு போக்கிவிடும்.

உபயோகம்:— பலவிதக்காய்ச்சல், சன்னி, இன்புளுயன்சா, இருமல், கக்குவாய் இருமல், சுவாசகாசம் என்ற ஆஸ்த்மா இவைகளில் முறைப்படி உபயோகித்தால் மிகுந்தநன்மை பயக்கும்.

அளவு :— அரைகிரெயின்சு அளவுக்கு தினம் மூன்று வேளை உபயோகிக்கலாம். வியாதியின் வேகத்திற்குத்தக்கவிதமாக ஒரு கிரெயின்சு அளவிலும் கொடுக்கலாம். சிறு குழந்தைகளுக்கு இன்னும் குறைந்த அளவில் கொடுக்கவேண்டும்.

அனுபானம் :— அனேகமாக எல்லா பஸ்ம சிந்தூரங்களையும் தேனில் குழைத்துக்கொடுப்பதுதான் முறை. சில விசேஷித்த வியாதிகளில் நெய், வெண்ணை, இவைகளில் குழைத்துக் கொடுப்

பதமுண்டு. நோயாளி பிரக்ஞையற்று இருக்கும் சமயத்தில் இதைத் தேனில் குழைத்துக் கொடுப்பது சிரமம். அந்த சமயங்களில் ஒரு கடிதத்துண்டில் மருந்தை எடுத்து அப்படியே நோயாளியின் வாயில் கொட்டி விடுவது உசிதம்.

குறிப்பு:— இந்த பஸ்மம் மிகுந்த கியாதிபெற்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் உபயோகிக்கும் விதத்தைப்பொறுத்தே குணம் தெரியும். இதைப்போன்ற பஸ்ம சிந்தூரங்களைத்தேன்முதலியவைகளில் குழைத்துக்கொடுத்தவுடன் அதற்குத் தகுந்தவிதமாகக் கிஷாயம் அல்லது சுரசங்களைச்சேர்த்துக் கொடுக்கவேண்டும். அப்படிச் சேர்த்துக் கொடுப்பதால் இவைகளின் வேகம் மிகுதிப்படுகின்றது. ஆகையால் வைத்தியர்கள் இதைக் கியாபகத்தில் வைத்துக்கொண்டு கிஷாயம் முதலியவைகளைச்சேர்த்துக்கொடுக்கவேண்டும். அந்தந்த வியாதிக்குத் தக்கவிதமாகக் கிஷாயம் வகையறுவைச் சேர்த்துக் கொடுக்க வேண்டியிருப்பதால் அது அனுபவத்தாலேயே தெரிந்து கொள்ளவேண்டும். பின்னால் கிஷாயம்வகையறு எழுதும்பொழுது அனுபவத்தைக் குறிப்பிடுவோம்.

பத்தியம் :— காய்ச்சல் முதலிய வியாதிகளில் உபயோகிக்கும் பொழுது வியாதிக்குரிய பத்தியங்களை அனுசரித்துக்கொள்ள வேண்டும். வைத்தியசாரத்தில் அந்தந்த வியாதிகளில் வியக்தமாகச் சொல்லியிருக்கிறோம்.

இந்த மருந்தின் பத்தியமாவது :— புளி, காரம், தள்ள வேண்டும். பால் அன்னம் அல்லது மோர் அன்னம்தான் எடுத்துக் கொள்ளலாம். எண்ணெ, கடுகு, உளுத்தம்பருப்பு, காய்கறிகள் எல்லாம் விலக்கே.

2. சுதர்சன சூர்ணம் :— கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவத்தல், விராளிமஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், பூலாங்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, தேசாவரம், மருள் கிழங்கு, சீந்தில்தண்டு, சிறுகாஞ்சொரிவேர், கடுகுரோ

கிணி, பர்பாடகம், கோரைக்கிழங்கு, மருக்கொன்னை, வெட்டிவேர், வேப்பம்பட்டை, கோஷ்டம், அதிவிடயம், வெப்பாலைப்பட்டை, ஓமம் வெப்பாலையரிசி, சிறு தேக்கு, முருங்கைவிதை, காவிக்கல், வசம்பு, லவங்கப்பட்டை, தாமரைத்தண்டு, விலாமிச்சவேர், செஞ்சந்தனம், அதிவிடயம், குருந்தொட்டிவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், வாய்விளங்கம், தகரைவேர், சித்திரமூலவேர், தேவதாரு, செவ்வியம், பேய்ப்புடல், லவங்கம், மூங்கிலுப்பு, வெண்தாமரைக்கிழங்கு, பச்சிலை, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி, அமுக்காராக்கிழங்கு, வகைக்கு பலம் ஒன்று, நிலப்பூஷணிக்கிழங்கு பலம் இரண்டு, நிலவேம்பு பலம் 26½ இவைகளை வெய்யிலில்வைத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும் தினம் வேளை ஒன்றுக்கு கால்தோலாமுதல் அரைத்தோலாவரையில் இரண்டு அவுன்சு பச்சைத்தண்ணீரில் கலக்கி சாப்பிடவும். இரண்டு அல்லது மூன்றுவேளை சாப்பிடலாம்.

செய் முறை:— கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவத்தல், இவைகளைத் தனித் தனியேதட்டி விதையைப் போக்கி தோலாக எடுத்துக்கொள்ளவும் முள்ளியென்பது கண்டங்கத்திரியைப்போலவே யிருக்கும். ஆனால் கண்டங்கத்திரி கொடி, முள்ளி செடி, கண்டங்கத்திரிக்காயைவிட முள்ளிக்காய் பெரிதாகவும் கத்திரிக்காய் போன்றும் இருக்கும். இலை இரண்டுக்கும் ஒரேவிதமாகயிருக்கும். சீந்தில்கொடி பருமனைக்கொண்டுவந்து சிறிய பில்லைகளாக நறுக்கிகொள்ளவேண்டும். இது வெய்யிலில்காய சிலநாள் பிடிக்கும். ஆனதால் இதை முன் ஜாக்கிரதையாகத் தயாரித்துக்கொள்ளவும் சிறுகாஞ்சொரியில் இரண்டு வகையுண்டு. எது கிடைத்தாலும் எடுத்துக்கொள்ளலாம். மருக்கொன்னை என்பதற்கு மயில்கொன்னையென்றும் சிட்டிமந்தாரம் என்றும் வேறுபெயர்களுண்டு. இதற்கு தெலுங்கில் ரேலசெட்டு என்றும் ஆங்கிலத்தில் Poinciana Pulcherrima என்றும் பெயர். இதற்கு ஹிந்துஸ்தானியில் த்ராயமான் என்று பெயர். இது பேதியாகும் குணமுள்ளது. இதின் இலைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். குருந்தொட்டி, ஓரிலை, மூவிலை இவைகளின் வேர்களை மலையாளத்திலிருந்து வரவழைத்துக்கொள்ள வேண்டும். நிலப்பூஷணிக்

கிழங்குக்கு மலையாளத்தில் மதக்கு என்று பெயர். அவ்விடத்திலிருந்தே வரவழைத்துச் சிறிய பில்லைகளாக நறுக்கி வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். மற்ற சாக்குகள் பிரசித்தமானவை. இவைகளை ஒன்று சேர்த்து இடித்து ஓர் ஜாடியில் காற்றுப்போகாமல் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் :— எல்லாக் காய்ச்சல்களிலும் உபயோகிக்கலாம். மிகுந்த கசப்பாகயிருக்கும். பெரும்பாலும் சுதேச வைத்தியர்கள் இதையே கையாண்டுவருகிறார்கள். சூர்ணமாகஉபயோகிக்கக்கூடாத காலங்களில் இதைப்போட்டுக்கிஷாயம்செய்தும்கொடுக்கலாம் இதை கிஷாயமாகச் செய்துகொடுக்கும் பக்ஷத்தில் பாஷாணபஸ்மத்திற்கு அனுபானமாகவும் கொடுக்கலாம். மிகுந்த நன்மை செய்யும்.

3. ஜ்வராந்தகலௌஹம் :— சித்திர மூலவேர், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவத்தல், சுக்கு, திப்பிலி, மிளகு வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, யானைத்திப்பிலி, தேசாவரம், விலாமிச்சவேர், தேவதாரு, நிலவேம்பு, மலைதாங்கிவேர், கடுகுரோகிணி, கண்டங்கத்திரிவேர், முருங்கைவிதை, அதிமதூரம், வெப்பாலைப் பட்டை, வகைக்கு தோலா மூன்று, இடித்து வஸ்திரகாயம் செய்து அயச்சிந்தூரம் தோலா 60 கலந்து நீரை விட்டு இரண்டு குன்றிமணி இடையுள்ள குளிகைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும். வேளை ஒன்றுக்கு இரண்டு குளிகை வீதம் தினம் இரண்டுவேளை சாப்பிடவும்.

அனுபானம் :— வென்னீரைவிட்டு விழுங்கலாம். அல்லது காய்ச்சல் கிஷாயங்களில் ஏதாவது ஒன்றையும் வென்னீர் ஸ்தானத்தில் உபயோகிக்கலாம். குழந்தைகளுக்கு அரை குளிகை முதல் தேனில் கலக்கிக்கொடுக்கலாம். அதாவது ஒரு சந்தனக் கல்லில் நாலு அல்லது ஐந்து பொட்டு தேன்விட்டு குளிகையை அதில் உரைத்து நாக்கில் தடவலாம். அல்லது முலைப்பாலில் உரைத்துப் போட்டலாம்.

## ஜ்வரம்.

குறிப்பு:— பல சுரங்களில் சுரவேகத்தால் ரக்தம் க்ஷீணமடைகின்றது, ரக்தம் க்ஷீணமடைவதால் சுரம் வலுப்படுகின்றது. அக்காலங்களில் இந்த மருந்து மிகுந்த நன்மையை விளைவிக்கும் இந்த மருந்தில் அயச்சிந்தூரம் சேருவதால் அதைச் செய்யும் விதத்தைச் சொல்லுகிறோம்.

அயச்சிந்தூரம்:— தேனிரும்பைத் தகடுகளாகத்தட்டி கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், இவை மூன்றையும் சமபாகமாக எடுத்து தட்டி கிஷாயம்செய்து வடிகட்டிக்கொண்டு அந்த கிஷாயத்தில் அயத் தகடுகளை நெருப்பில் காய்ச்சி ஏழுதடவை தோய்க்கவும். சுத்தியாகும். பிறகு அந்தத் தகடுகளை அரத்தால் பொடிசெய்து கொள்ளவும். கடையில் கிடைக்கும் இரும்புப்பொடி சுத்தமானதாக இராததால் அதை எடுத்துக்கொள்ளக்கூடாது. உதியமரத்தின் பட்டையை இடித்து சார்பிழிந்துகொள்ளவேண்டும். மேற்படி பட்டையில் சாறு எடுக்கும்பொழுது ஜலத்தைத்தெளித்து ரசத்தை எடுக்கக் கூடாது. ஜலத்திற்கு பதிலாகப் புளித்த காடி ஜலத்தை தெளித்துக் கொள்ளவேண்டும். பட்டைகளை நன்ருக இடித்து காடி ஜலத்தை கொஞ்சம் தெளித்து மறுபடியும் நன்ருக இடித்து ரசம் பிழிந்து வடிகட்டிக்கொண்டு அரப்பொடியைக் கல்வத்திலிட்டுப்பொடி முழுகும்படி அந்த ரசத்தை ஊற்றி வெய்யிலில்வைக்கவேண்டும். இவ்விதம் மூன்று நாள் வெய்யிலில் வைக்கவேண்டும் வெய்யிலில் வைத்து ரசம்இஞ்சிவிட்டரல் மறுபடியும் பொடிமுழுகும்படி மேற்படி ரசத்தை விடவேண்டும் வேண்டிய ரசத்தை ஒரே தடவையில் தயாரித்து வடிகட்டி சீசாவில் பத்திரமாகவைத்துக்கொண்டு மூன்றுநாள்களுக்கும் வைத்துக்கொள்ளலாம். உடனுக்குடன் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது. மூன்ருவதுநாள் சாயங்காலம் ரசம் வெய்யிலில் இஞ்சிப்போன பிறகு எடுத்துக்கொள்ளவும் பிறகு மறுநாள் அதேமாதிரி ரசம்விட்டரைத்து பில்லைதட்டவேண்டும். பஸ்ம சிந்தூரங்களில் பில்லைகள் சிறிய அளவாகவேயிருக்கவேண்டும் அதாவது ஒருபை அல்லது காசு என்ற நாணயத்தின் உருவத்திற்கு சரியாகயிருந்தால் உத்தமம் அந்தபில்லைகளை வெய்யிலில் காயவைக்க

வேண்டும். நன்ருகக்காய்ந்தபிறகே புடமிடவேண்டும். நன்ருகக்காய சிலநாள் பிடித்தாலும் பாதகமில்லை. நல்ல வெய்யில் காலத்தில் ஒரே நாளில் காய்ந்துவிடும். மழைகாலங்களில் சிலநாள் பிடிக்கும். பில்லைகள் நன்ருகக்காயாவிட்டால் சிந்தூரம்நிறம் கொடுக்காது. ஆகையால் பில்லைகள் வெங்கலம்போன்ற சப்தம்வரும்படி காயவேண்டும். பிறகு அந்த பில்லைகளைச்சற்று இடம் விட்டு விட்டு பரப்பும்படி அகலமான அகல் சம்பாதித்து அதில் பில்லைகளை ஒரு வரிசையாக வைக்கவும். ஒன்றின்மேலொன்று அடுக்கக்கூடாது. பிறதுமேல் அகல்மூடி முன் சொன்னதுபோல சீலைமண் செய்யவும். சீலைமண் காயும்படி வெய்யிலில் வைக்கவும். பிறகு அசையாமல் அதைஎடுத்து கஜபுடம் இடவும் நெருப்பு ஆறியபிறகு எடுத்து பில்லைகளைக்கல்வத்தில் போட்டு மேற்படி ரசத்தால் அரைத்து மறுபடியும் பில்லைதட்டி முன்போல புடமிடவும் இவ்விதம் மொத்தத்தில் எட்டுபுடம் போடவும் பிறகு காடிஜலம்தெளிக்காத தனிரசத்தில் மூன்று புடம்போடவும் ஆகமொத்தம் பதினோரு புடம் ஆனபிறகு பில்லைகளைக் கல்வத்தில் நன்ருகப் பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். இந்தச்சிந்தூரத்தைப் பலவியாதிகளில் தனியாகவும் உபயோகிக்கலாம் வேறுமுறைப்படிச் செய்த அயச்சிந்தூரத்தையும் இதில் சேர்ப்பதால் பாதகமில்லை.

4. கலிங்காதி கிஷாயம்:— வெப்பாலையரிசி, சுக்கு, கோரைக்கிழங்கு, சூரத்துநிலவேம்பு, கடுகுரோகிணி, வேப்பம்பட்டை, சீந்தில்கொடி, கொத்தமல்லிவிதை, கோஷ்டம், செஞ்சந்தனம், பேய்ப்புடல், சிறுதேக்கு, ஆடாதோடையிலை, தாமரைத்தண்டு, இவைகளை சம இடையாக எடுத்து இடித்து கிஷாயம்செய்து வேளைஒன்றுக்கு இரண்டு அவுன்சு கிஷாயம் வீதம் தினம் மூன்றுவேளைகொடுக்கலாம்.

செய்யும்விதம்:— இந்தக் கிஷாயச் சரக்குகளை சம இடையாக எடுத்து இடித்து ஒருதகரடப்பி அல்லதுஜாடியில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வேளைக்கும் புதியகிஷாயமாகப் போட்டுக் கொடுப்பது நல்லது. இல்லாவிட்டால் கிஷாயத்தைப்போட்டு வடிகட்டி சீசாவில் வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம். 24மணிக்குபிறகு அந்தக்கிஷாயத்தை உபயோகிக்கக்கூடாது.

உ

# ஸஹஸ்ர யோகம்.

மலையாளத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்திய நூலின் மொழி பெயர்ப்பு.

ஆயுர்வேத வைத்தியர் ஸ்ரீமான்

**T. S. சுப்ரமண்யம் அவர்களால்**

மொழி பெயர்க்கப்பட்டு,

**பண்டிட் S. நாராயண அய்யங்கார்**

அவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டது.

---

கிடைக்குமிடங்கள்:—


பண்டிட் S. நாராயண அய்யங்கார்.
2. நிர். போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து,
மதுரை.

---

T. S. சுப்ரமண்யம்.
ஆயுர்வேத வைத்தியர்,
35. நிர். காக்காத்தோப்புத் தெரு,
மதுரை.


---


மதுரை காக்காத்தோப்புத் தெரு,
வேங்கடேஸ்வர் பிரசில் பதிப்பிக்கப்பெற்றது.
(மதுரை 1938.)

# முகவுரை.

மலையாள தேசம் முழுவதும் எல்லா வைத்தியர்களாலும் பிரதி தினம் கையாளப்பட்டுவரும் ஸஹஸ்ர யோகம் என்ற வட மொழி வைத்திய நூலில் பல கஷாயங்கள், சூர்ணங்கள், குளிகைகள், கிருதங்கள், லேகியங்கள், தைலங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்நூல் வெகுகாலத்திற்கு முன் இருந்த ஓர் மலையாள வைத்தியரால் பல நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது. மலையாள வைத்தியர்கள் இந்நூலையே பிரதானமாகக்கொண்டு இதிலுள்ள முறைகளின்படியே நாளது வரை சிகித்சை செய்துவருகின்றனர். ஸஹஸ்ர மென்றால் ஆயிரம். யோக மென்றால் மருந்து ஜாப்தா. ஆயியரக்கணக்குள்ள மருந்து ஜாப்தாக்கள் இதில் சொல்லப்பட்டிருப்பதால் ஸஹஸ்ர யோகமெனப் பெயரிடப்பட்டது.

இதிலுள்ள முறைகளைத் தமிழ் வைத்தியர்களும் மற்றவர்களும் நன்கு தெரிந்துகொள்ளுமாறு தமிழில் மொழி பெயர்க்க வேண்டுமென்று வெகு நாள்ாக நமது கோரிக்கை. வைத்திய சந்திரிகை மூலமாக இதை வெளியிடுவதெனத் தீர்மானித்தோம். இதை மொழி பெயர்ப்பதில் ஆயுர்வேத வைத்தியர் ஸ்ரீமான் டி. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் முக்கியப்பங்கு எடுத்துக்கொண்டதற்கு நாம் நன்றி காட்டக் கடமைப்பட்டுள்ளோம். இம்மொழி பெயர்ப்பு பூர்த்தியான பிறகு பைஷஜ்ய ரத்நாவளி முதலிய வட மொழி நூல்களையும் மொழி பெயர்த்து வெளியிட நிச்சயித்திருக்கின்றோம்.

**பண்டிட் நாராயணய்யங்கார்.**

2. நெ. போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து,

மதுரை.

# ஸஹஸ்ர யோகம்.

## கஷாய யோகங்கள்,

1. கஞுதி கஷாயம்:— கோரைக் கிழங்கு, சந்தனம், சுக்கு, வெட்டிவேர், பர்ப்பாடகம், விலாமிச்சம் வேர், இவைகளைக் கஷாயம் செய்து கொடுத்தால் பாசன சக்தியுண்டாகும். தாகஜ்வரம் தீரும்.

குறிப்பு:— இந்த கஞுதி கஷாயத்தை ஷடங்கபானீயமெனச் சில நூல்களில் கூறப்படுகின்றது. பானீயமென்றால் குடி நீர். ஆகவே இதைக் குடிநீராகவும் கஷாயமாகவும் ஆக இருவிதமாகத் தயாரித்து உபயோகிக்கலாம். இவ்விருவிதங்களிலும் செய் முறை வித்தியாசமிருக்கின்றது. அதைப்பிறகு விவரிப்போம். 1918-ம் வருஷத்தில் டாக்டர் கோமன் அவர்கள் எழுதிய ரிப்போர்ட்டில் இதைப்பற்றிப் பெருமையாக எழுதியுளளார்.

'This cooling decoction is a famous and well known remedy in Malabar which almost every mother knows to administer to her little ones seized with fever. It is generalley administered to adults as a diaphoretic and for quenching thirst in fevers. It is also used in subduing vomiting accompanying fevers. This decoction was used as a diaphoretic and for quenching thirst in all sorts of fevers and found to serve those purposes well"

" இந்த ஷடங்கபானீயமென்ற குளிர்ச்சி குணமுள்ள கஷாயம் பிரசித்தமானது. மலையாள தேசத்தில் மிகப்பிரசித்தமானது. ஒவ்வொரு தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்குக் காய்ச்சல் வரும்பொழுது இந்தக் கஷாயத்தை உபயோகிக்கத் தெரிந்து கொண்டிருக்கின்றனர். பொதுவாக இக்கஷாயம் காய்ச்சல்களில் தாகத்தைத்தணிக்கவும் வியர்வையையுண்டுபண்ணவும் வயதுவந்தவர்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது. காய்ச்சலை யொட்டிவரும் வாந்திகளைத் தணிக்கவும் உபயோகிக்கப்படுகின்றது. எல்லாவிதக் காய்ச்சல்களிலும் தாகத்தைத் தணிக்கவும் வியர்வையை அதிகரிக்

கவும் நாம் உபயோகித்துப் பார்த்ததில் இந்தக் கஷாயம் மேற்படி குணங்களை நன்கு அளித்ததை அனுபவத்தில் கண்டோம்." கன்யாகுமரிமுதல் ஹிமாலயம் வரையிலுள்ள எல்லா சுதேச வைத்தியர்களும் இதை உபயோகிக்கின்றனர். வடமொழி நூல்கள் எல்லாவற்றிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

பானீயம் அல்லது குடிநீர் செய்யும் முறை:— மருந்துச் சரக்குகள் முழுவதையும் இடித்து ஓர் புதுச் சட்டியில்போட்டு அந்த அளவுக்கு முப்பத்திரண்டு மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பேற்றிப் பாதியாக வற்றவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். பானீயம் அல்லது குடிநீர் சொல்லுமிடங்களிலெல்லாம் இந்த முறையையே பின்பற்ற வேண்டும்.

கஷாயம் செய்யும் முறை:— கஷாயம் என்பது இரு வகைப்படும். காய்ச்சல் முதலிய வியாதிகளில் தனியாகக் குடிப்பதென்பது ஓர்வகை. சாஸ்திரங்களில் தைலம், கிருதம், இவைகளில் சேர்த்துக் காய்ச்சுவதற்காகச் சொல்லப்படுவது இரண்டாவது வகை. இவற்றுள் தனியாகக் குடிக்கும் கஷாயம் செய்யும் விதத்தை இப்பொழுது சொல்லுகிறோம். தைலம், கிருதம், ஆஸவம், அரிஷ்டம் வரும் இடத்தில் இரண்டாவது முறையைச்சொல்லுவோம். கஷாயச் சரக்குகளை யிடித்துப் புதுச்சட்டியில் போட்டு ஷை சரக்குகளின் அளவுக்குப் பதினாறு மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பேற்றி நாலிலொன்றாக வற்றவைக்கவும். இனிக் குடிநீரிலும் தனிக் கஷாயத்திலும் பெரியவர்களுக்கு ஒருவேளைக்கு உபயோகிக்கவேண்டிய சரக்கின் அளவை விவரிப்போம். மருந்துச் சரக்குகள் அல்ப வீரியங்களென்றும், மத்ய வீரியங்களென்றும், தீக்ஷ்ண வீர்யங்களென்றும் மூவகைப்படுகின்றன. நெல்லிக்காய், தான்றிக்காய்போன்றவைகள் அல்ப வீர்யங்கள். அதாவது மிருது வீர்யங்கள். வில்வவேர், முன்னைவேர்போன்றவைகள் மத்யவீர்யங்கள். மிளகு, திப்பிலி, போன்றவைகள் தீக்ஷ்ணவீர்யங்கள். மிருது வீர்யங்களான சரக்குகளடங்கிய யோகத்தில் நான்குதோலா (தோலா என்பது ஒருரூபாவிடை) அளவு ஓர்வாலிபனுக்கு ஒருவேளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அளவு குடி கஷாயத்திற்கு

மாத்திரமுள்ளது. ஆகவே இருகஷாயத்திலும் ஜலத்தின் அளவும் முன்சொன்னபடி வேறுபடும். சாஸ்திரங்கள் இவ்வாறு கூறிய போதிலும் தற்காலம் வைத்தியர்கள் வழக்கம் வேறுவிதமாக விருக்கின்றது. மிருதுவீர்யமும், மத்யமவீர்யமுமான சரக்குகளை இரண்டு தோலா அளவுயெடுத்து இடித்து சின்னப்படியில் கால்படி ஜலம் விட்டு நாலில் ஒன்ருகக் காய்ச்சி வடிகட்டி ஒரு வேளைக்கு உபயோகிக்கின்றனர். உதாஹரணமாக இந்த ஷடங்கபானீயத்தைக் குடிநீராகச் செய்வதாகில் இதில் மூன்றுவித வீர்யமுள்ள சரக்குகள் சேர்ந்திருப்பதைக் கவனிக்காமல் இதிலுள்ள ஆறு சரக்குகளையும் சமயிடையாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஆறுசரக்குகளும் சேர்ந்து மொத்தம் ஒரு தோலாவாக இருக்க வேண்டும். அதை யிடித்து பக்காப் படியில் (பெரிய படியில்) ஒருபடி ஜலம் விட்டுச் சரிபாதியாகக் காய்ச்சவேண்டும். குடி கஷாயத்தில் சமயிடையாக இந்த ஆறு சரக்குகளையுமெடுத்து மொத்தம் இரண்டு தோலாவாக நிறுத்துக்கொள்ளவும். அதையிடித்துக் கால்படி (சின்னபடி) ஜலம்விட்டு நாலில் ஒன்ருக அதாவது சின்னப் படியில் வீசம்படியாக வற்றவைத்து ஒருவேளைக்கு உபயோகிக்கவும். இதை இங்கிலீஷ்க் கணக்குப்படிப் பார்த்தால் இரண்டு தோலாவென்பது ஆறுடிராம் ஆகும். ஆறுடிராம் நிறுத்து அதற்கு ஆறு அவுன்சு ஜலம்விட்டு ஒன்னரையவுன்சு ஜலமாக வற்றவைத்து வடிகட்டி ஒருவேளைக்குச் சாப்பிடவேண்டும். இனிவரும் கஷாயங்களிலும் இவ்விதமே அறியவேண்டும். குழந்தைகளுக்கு வயதிற்குத்தக்கவிதமாக மேற்படி கஷாயத்தில் ஒரு டிராம் முதல் கொடுக்கலாம்.

இக் கஷாயத்தில் சொல்லப்பட்ட சந்தனம் என்பது சிகப்பு சந்தனம். சந்தனத்தில் பலவகையுண்டு. அனேகமாக மருந்தில் சேரக்கூடியது. இருவகைச் சந்தனமே. உள்ளுக்குக் கொடுக்கும் மருந்துகளில் அனேகமாக சந்தனமென்ருல் அதுசிகப்புச்சந்தனம். தைலங்களில் அல்லது மேலுக்கு உபயோகிக்கும் மருந்துகளில் சந்தனமென்ருல் அது வெள்ளைச் சந்தனமே. இருவகைச் சந்தனமும் கடைகளில் சுலபமாகக் கிடைக்கும். இக் கஷாயத்தில்

அஷ்டாங்க ஹிருதயத்திற்கும் மற்ற நூல்களுக்கும் சற்று பேத முண்டு. அஷ்டாங்க ஹிருதயத்தில் சுக்கு என்பதற்குப் பதிலாக பத்மகம் என்ற சரக்கு சொல்லப்பட்டிருக்கின்றது. பத்மகம் என்பது பதிமுகம் என்ற ஓர் வேர். இதை வடமொழியில்பத் மகாஷ்ட மென்பர். மலையாள தேசத்தில் பதிமுகம் என்று சாதாரணமாக வழங்கப்படுகின்றது.

(2) **தோயாதி:—** வெட்டிவேர், கோரைக் கிழங்கு, நிலவேம்பு, பொன்முசட்டை, மல்லி விதை, சுக்கு, இவைகளைக் கஷாயம் செய்து கொடுத்தால் எல்லா ஜ்வரங்களுக்கும் பாசனமாம்.

**குறிப்பு:—** பொன்முசட்டை என்பதற்கு சில யிடங்களில் மலைதாங்கிவேர் என்றும், வெற்பேந்தி யென்றும், பங்கம்பாளை யென்றும் சொல்லுவார்கள். கடைகளில் சாதாரணமாகக் கிடைக்கும். வியாதிக்குக் காரணமாகிய வாதபித்த கபங்களைப் பக்குவ மாகும்படி செய்வதற்குப் பாசனமெனப் பெயர். கஷாயம் செய்யும் விதமும் அளவும் முன் சொல்லியவிதமே. மேலும் இவ்விதமே செய்து காண்க.

(3) **பாடாதி:—** பொன் முசட்டைவேர், முன்னைவேர், முள்ளிச்செடிவேர், கண்டங்கத்திரி வேர், சுக்கு, இவைகளைக் கஷாயம் கொடுக்கவும்.

(4) **குடூச்யாதி:—** சீந்திற்கொடி, தேசாவரம், (இதற்குக் கண்டத் திப்பிலியென்றும் நறுக்கு மூலமெனவும் பெயர்உண்டு) வெட்பாலையரிசி, இவைகளைக் கஷாயம் செய்துகொடுக்கவும்.

(5) **வாசாதி:—** ஆடாதோடை, சீந்திற்கொடி, கோரைக் கிழங்கு, பேய்ப்புடல், சுக்கு, இவைகளைக் கஷாயம் செய்து கொடுக்கவும்.

**குறிப்பு:—** இந்த 3, 4, 5, கஷாயங்கள் வாதஜ்வரங்களைத் தணிக்கும். ஆடாதோடையில் இலையும் வேரும் எடுத்துக்கொள்வதுண்டு. இந்த இடத்தில் இரண்டில் எதையும் எடுத்துக்கொள்ளலாம். இலையைவிட வேருக்கு குணம் அதிகம். பேய்ப்புடல் என்பது கொடி. இதில் இலைமாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டும். இலைமாத்திரம் கிடைப்பது கஷ்டமாக இருப்பதால் தென்

னுட்டில் கொடியையும் எடுத்துக்கொள்ள வேண்டியதாகிறது. வட தேசத்துக் கடைகளில் இலைமாத்திரம் விற்கப்படுகின்றது. இது ஒன்று அல்லது இரண்டுதரம் மலப்பிர விருத்தி செய்யக்கூடியது. இந்த குணத்தை ஆங்கிலத்தில் laxative என்பார்கள்.

(6) கோபாங்கனுதி:— நன்னரிவேர், தாமரைக் கிழங்கு, சந்தனம், விலாமிச்சம் வேர், சுக்கு, அதிமதுரம், வெட்டிவேர், நெய்தற் கிழங்கு, இலுப்பைப்பூ, தண்ணீர்விட்டான் கிழங்கு, இவைகளைக் கஷாயம் செய்து தேனும் சர்க்கரையும் மேம்பொடியாகச் சேர்த்துக்கொள்ளவும். பித்தஜ்வரம், உடம்பு எரிச்சல், இவைகள் தீரும்.

குறிப்பு:— இவ்விடத்திலும் சந்தன மென்பது சிகப்புச் சந்தனமே. வெளுப்புச்சந்தனத்தை யுபயோகிப்பது பலர்வழக்கம். அது சாஸ்திரவிருத்தம். மேம்பொடி யென்பது கஷாயத்தில் போட்டுக்கலக்கிக் கொடுக்கப்படும் வஸ்து. தேன், நெய், பெருங்காயம், திப்பிலிப்பொடி, சர்க்கரை, இவை முதலியவைகள் மேம்பொடியாக அநேக மருந்துகளிற் சொல்லப்படுகின்றன. இந்தக்கஷாயத்தில்தேனும் சர்க்கரையும் மேம்பொடியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தமேம்பொடிகளில் அந்தந்த சாமானுக்குத் தக்கவிதமாக இடையும் அளவும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேம்பொடிகளை அளவில்லாமல் மனம்போனபடி போடக்கூடாது. கஷாயச் சரக்குகளின் மொத்த அளவில் நாலில் ஒரு பங்கு மேம்பொடி போடவேண்டு மென்பது சாஸ்திரக்கொள்கை. அவ்விதம் பார்த்தால் இரண்டுதோலா கஷாயச் சரக்குக்கு நாலில் ஒருபங்கு அதாவது அரை ரூபாயிடை மேம்பொடி போடவேண்டியதாகும். ஆனால் வடதேசத்து வைத்தியர்கள் கால் ரூபாயிடையிலிருந்து காலேயரைக்கால் ரூபாயிடைவரையில் மேம்பொடிபோட்டுவருகிறார்கள். ஆகவே இக் கஷாயத்தில் கால் ரூபாயிடை தேனும் கால் ரூபாயிடை சர்க்கரையும் சேர்க்கவேண்டும். தற்காலம் நமது நாட்டில் பலவித சர்க்கரைகள் விற்கப்படுகின்றன. கரும்பில் உண்டாகும் சர்க்கரைதான் உத்தமம்: ஆகையால் நாட்டுச் சர்க்கரைதான் மருந்துகளில் சேர்க்கவேண்டும். மற்ற கிழங்கு சர்க்கரை சேர் தால் மருந்தின் குணம் கெட்டுவிடும்.

(7) பத்யாதி:— கடுக்காய், கட்பலம், சுக்கு, கோரைக்கிழங்கு, வசம்பு, நிலவேம்பு, மல்லி விதை, தேவதாரு, சிருதேக்கு, பர்ப்பாடகம், இவைகளைக் கஷாயம் செய்து தேன், பெருங்காயம், இவைகளை மேம் பொடியாகப் போட்டுக் கொடுக்கவும். கபஜ்வரம், வயிற்றுவலி, வாயு, அக்கிமந்தம், இருமல், அரோசகம், நாவுலர்தல், தீரும்.

குறிப்பு:— கட்பலம் என்பது ஸம்ஸ்கிருதப்பெயர். இதற்கு காயபல் என்பது ஹிந்துஸ்தானிப் பெயர். இது ஓர்வித மரப்பட்டை. கால் அங்குல கனமுள்ளதாக விருக்கின்றது. பட்டையின் மேற்புரம் சொரசொரப்பாக விருக்கின்றது. இதை மலையாளத்தில் குமிழ் என்று சொல்லுகிறார்கள். அது தவறு. குமிழ் என்பது காச்மர்யமென வடமொழியில் சொல்லப்படுகின்றது. காச்மர்யமும் கட்பலமும் வெவ்வேறானது. இதில் சேரும் மேப் பொடியில் தேனின் அளவை முன்பே சொன்னோம். வெள்ளி நாணயம் அரைக்கால் ரூபாயிடையில் பாதி அதாவது ரூபாயிடையில் பதினாறில் ஒருபங்கு ($\frac{1}{16}$) பெருங்காயத்தை மேம்பொடியில் சேர்க்கவேண்டும். பெருங்காயங்களில் பலவகையுண்டு. வெளுப்புப பெருங்காயம் வைத்திய முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். பெருங்காயத்தை அப்படியே பொடிசெய்து கஷாயத்தில் போட்டுக்கொள்ள வேண்டும். சுத்தமும் காரமுமான பெருங்காயமாக விருந்தால் $\frac{1}{32}$ ரூபாயிடை போடுவது வழக்கம்.

(8) திராக்ஷாதி:— விதையுள்ள திராக்ஷைப்பழம், இலுப்பைப்பூ, அதிமதுரம், வெள்ளி லோத்திப்பட்டை, குமிழம் பழம், நன்னாரி வேர், கோரைக் கிழங்கு, நெல்லி வற்றல், வெட்டிவேர், தாமரை, அல்லி, பத்மகாஷ்டம், (இதை மலையாளத்தில் பதிமுகம் என்பா) தாமரைத் தண்டு, செஞ்சந்தனம், விலாமிச்சம் வேர், கருநெய்தற் கிழங்கு, சிற்றீந்தல் காய், இவைகளைக் கஷாயம் செய்து அதில் ஜாதிப் பூவைப்போட்டு வாசனையூட்டி தேன் சர்க்கரை நெற்பொ இவைகளை மேம்பொடியாகப் போட்டுக் கொடுத்தால் பித்தஜ்வரம், மதாத்யயம், வாந்தி, மூர்ச்சை, எரிச்சல், களைப்பு, கிருகிருப்பு மேல் நோக்கும் ரக்தபித்தம், தண்ணீர் தாகம், காமாலை இவைகள் நீங்கும்.

2/10/67

# வைத்தியச் செய்திகள்.

## சுதேச வைத்திய ஸபை, மதுரை.

ஷை சபையின் ஆதரவில் 1938ஙு அக்டோபர் மீ 16உ ஞாயிற்றுக் கிழமை மாலை 5-மணிக்கு காக்காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் ஸ்ரீமான் M. K. ஸ்ரீநிவாஸ அய்யர், அவர்கள் B. A., B. L., அட்வகேட் தலைமையில் சுதேச வைத்தியர்களின், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் ஆயுர்வேத வைத்தியர் ஸ்ரீமான் T. S. சுப்ரமண்யம் அவர்கள் அதிசார ரோகமும் அதன் சிகித்சையும் என்பதைப் பற்றி விரிவாக உபன்யசித்தார்கள். மற்றும் பலரும் ஷை விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

## தன்வந்தரி ஜயந்தி.

ஷை சபையின் ஆதரவில் 20—10—38உ வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு மதுரை ராமேசுவரம் தேவஸ்தானம் ஸம்ஸ்கிருத பாடசாலை பிரின்ஸிபால் ஸ்ரீமான் V. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் தலைமையில் ஸ்ரீதன்வந்தரி ஜயந்தி கொண்டாடப்பட்டது. ஆரம்பத்தில் ஸ்ரீதன்வந்தரி பகவான் பூஜையும் பிறகு டாக்டர் S. வன்னியக் கோனார் அவர்களால், ஸ்ரீதன்வந்தரியின் பெருமை என்பதைப் பற்றி உபன்யாசமும் நடைபெற்றது. பல வைத்தியர்களும் அபிமானிகளும் ஷை விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். பிறகு சந்தனம், தாம்பூலம், வழங்கப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

T. S. சுப்ரமண்யம்.

காரியதரிசி,

சுதேச வைத்திய ஸபை, மதுரை.

Registered No. M.

# வைத்திய சந்திரிகா.

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையை
அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய
யோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே ந
மாஸிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ணப
டித்தியம் வாய்த்த எமது ஆசிரியரும், மற்றும் பழையமுறை
பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கு
பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்கள்
மொழி பெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் க
ணம், குணம், சிகிச்சை முதலியவைகளை மூடிமந்திரமில்லாம
"வைத்திய சந்திரிகா" பிரதிமாதமும் தாங்கிவருவாள். வைத்தி
முறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்களுக்கு ஒருவைத்தி
கலாசாலையைப்போல் நமது "சந்திரிகா" உதவுவாள்.

சந்திரிகையின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் கடைசியாக
தில் வைத்தியசாரம் என்றும் ஔஷதசாரம்என்றும் ஸஹஸ்ரயோக
என்றும் மூன்று தனிப்புஸ்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவரு
ஒவ்வொரு வியாதியின்லக்ஷணம்,காரணம், அவற்றின் சிகித்சைமு
லியன விரிவாக வைத்திய சாரத்தில் எழுதப்படும். சரகம், சுசுருத
அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கசங்கிரஹம், பாவப்பிரகாசம், சார்
ஙதரம் பதினெண் சித்தர்கள்' இருப்பத்தெட்டு சித்தர்கள் முத
லவைகளிலிருந்து பலதடவை அனுபவத்தில் குணம் கண்டறி
பஸ்மம், சிந்தூரம், லேகியம், கஷாயம் முதலியன ஔஷதசாரத்
தெளிவாக செய்முறையுடன் சொல்லப்படும். மலையாளதேசத்
பிரசித்தமான ஸஹஸ்ர யோகமென்ற நூலைத் தமிழில் மொ
பெயர்த்து விரிவான செய்முறைகளுடனும் உபயோகிக்கும் வித
களுடனும் கூறப்படும். சுதேச முறைகளை நன்கு தெரிந்துகொள்
விரும்புபவர்களுக்கு இது ஓர் இன்றியமையாத சாதனமாகும்.

மானேஜர்,

'வைத்திய சந்திரிகா" மதுரை

கிடைக்குமிடங்கள்:—

பண்டிட் S. நாராயண அய்யங்கார்.
2, நி. போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

---

ஆயுர்வேத வைத்தியர், T. S. சுப்ரமண்யம்.
35, நி. காக்காத்தோப்புத் தெரு, மதுரை.